1975 மார்ச் 25]

இவை நீங்கலாக, 1973-74-ம் ஆண்டில் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் பயிர் செய்வதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1971-72-ஆம் ஆண்டில் சந்தன மர விற்பனையில் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் மாவட்ட வாரியாக பின்வருமாறு :

	ரூ.
வட ஆற்காடு	82,27,394·00
தருமபுரி	2,38,706·00
சேலம்	12,40,026·00
கோவை	23,16,539·00
நீலகிரி	1,21,645·00
இராமநாதபுரம்	75,841·00
திருச்சிராப்பள்ளி	2,36,550·00
மதுரை	5,039·49

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அதிகமான 'லெவி' யையும் சிவில் சப்ளேஸ் அதிகாரிகளின் தொந்தரவையும் எதிர்த்து தஞ்சாவூர் ஆட்சித் தலைவரிடம் தஞ்சாவூர் விவசாயிகளின் மகஜரும், அவர் அலுவலகத்துக்கு முன்பு உண்ணுவிரதமும் குறித்து.

மாண்புமிகு மேலவைத்தலைவர்: திரு. ஜி. சுவாமிநாதன் M. L .C. அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்:

" The massive procession, presentation of a petition of grievances to the District Collector and relay fast opposite Thanjavur Collectorate organised by the agriculturists of Thanjavur district at Thanjavur from today protesting against the abnormal and oppressive levy imposed on them in the existing condition of poor yield and also the untold suffering imposed on them due to harassment by the Civil Supplies officials who do not allow them to keep paddy even for seeds, agricultural operations and personal consumption. The protest is also against the open corruption by the officials especially in the lower levels who are engaged in levy operations. "

இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வரும் என்பதை உறுப்பினர் விளக்க வேண்டுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஆயிரக்கணக்கான தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒரு ஊர்வலமாகச் சென்றுர்கள். தற்சமயம் அரசாங்கத்தாராலே தஞ்சை மாவட்டத்திலே கையாளப்படுகின்ற கொள்முதல் முறையையும் லெவி முறையையும் கடுமையாக எதிர்த்து ஊர்வலம் சென்றுர்கள். அது தவிர இந்த

 அதிகமான 'லெவி'யையும் சிவில் சப்ளைஸ் அதிகாரிகளின் தொந்தரவையும் எதிர்த்து தஞ்சாவூர் ஆட்சித்தலைவரிடம் தஞ்சாவூர் விவசாயிகளின் மகஜரும், அவர் அலுவலகதது முன்பு உண்ணாவிரதமும் குறித்து.

(திரு. ஜி. சுவாமிநாதன்) [1975 மார்ச் 25.

லெவியைப் பொறுத்த வரையிலே அரசாங்க அதிகாரிகள் லெவி வசூலிப்பது என்ற பெயராலே விவசாயிகளுடைய வீடுகளுக்குச் சென்று அவர்கள் சாப்பிடுவதற்கு வைத்திருக்கக் கூடிய, விவசாயத்திற்காக வைத்திருக்கக் கூடிய நெல்லைக் கொண்டு போவதற்கு அதிகாரம் பெற்றிருப்பதால், வீட்டிற்கே வந்து துன்புறுத்துகின்ற காரணமாக ஏற்பட்டிருக்கின்ற சங்கடங்களைக் குறித்து அவர்கள் நேற்றைய தினம ஊர்வலம் போயிருக்கிறார்கள். அதிகப்படியான ஒரு லெவியைப் போட்டு விட்டு மக்கள் அந்த லெவியைக் கொடுக்கவில்லை என்று துன்புறுத்து கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் இதுபற்றி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைய தினம் தொடர் உண்ணாவிரதம் இருக்கும் ஒரு முடிவுக்கு தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் இங்கே வந்து பேசுவதற்கு முக்கியமான காரணம் அவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பம்தான். இதை நான் தங்கள் மூலம் அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இது மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால் இதைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கொள்முதல் பற்றி விவசாயப் பெருங்குடி மக்கள் அடிக்கடி பல்வேறு கருத்துக்களை அரசினரிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். முக்கியமாக இந்தக் கொள் முதல் எந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்று உத்தரவு போடும் போதெல்லாம், ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள், இவர்களையெல்லாம் கலந்து, அந்தந்தப் பகுதியிலே எவ்வளவு விளைச்சல் வரும் என்று கணக்கிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித்தலைவருடைய சிபாரிசுடைய அடிப்படையிலே கொள்முதல் அளவை நிர்ணயிக்கின்றோம். இந்த ஆண்டு நூறு ஆண்டுக் காலமாக சந்திக்காத ஒரு அசாதாரணமான பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தாலேயே விளைவு குறைவு என்பது தான் விவசாயிகளுடைய முக்கியமான வாதமாகும். விளைச்சல் குறைவாக இருந்து அதிகமான லெவி போடுவது தொல்லை தருகிறது என்பது அவர்களுடைய கருத்து ஆகும். அதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

(பிற்பகல் 4-30)

ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு நிலை இருக்கலாம். அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு விவசாயிகளுக்குத் தொல்லை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றது. நானும் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்த போது, சில விவசாயிகள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து நாங்கள் போட்டிருக்கக் கூடிய லெவியை வாங்க முடியும் என்று எனக்கே தோன்றியது.

1975 மார்ச் 25] (திரு. செ. மாதவன்)

அதற்குப் பின்னாலே இன்னொரு விவசாயி அவருடைய நிலத்திலே விளைந்த விவரத்தைக் கொடுக்கும்போது வாங்க முடியாத நிலைமை இருக்கும் என்று உணர முடிந்தது. ஆகவே, இடத்திற்கு இடம் நிலத்திற்கு நிலம் இந்த ஆண்டு நிலைமை மாறும் என்பது உண்மை தான். ஆகவேதான் இந்தத் தொல்லை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் இதை கவனமாகப் பார்த்துக் கொள்கிறார் என்றுதான் நினைக் கின்றேன். இன்னொரு சங்கடம் அரசுக்கு, இந்த ஆண்டு மொத்தமாக நாடு முழுவதும் மகசூல் குறைவாக இருக்கிற காரணத்தாலே, குறைந்த அளவுக்கு விளைந்தாலும் கூட, அதிகமாக அவர்களிடத்திலே கொள் முதல் செய்தால்தான் நாட்டு மக்களுக்கு விநியோகிக்க முடியும். அரசுக்கு இந்த ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கி நம்முடைய கொள்முதல் சரிவர நடக்காமல் போகுமானால், விநியோகிக்கின்ற முறை மிகவும் பாதிக்கப் படும். இதுதான் அரசாங்கத்திற்கு உள்ள சங்கடம். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் நேற்றுப் பேசும்போது அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தினுடைய சங்கடத்தை எடுத்துக்குறிப்பிட்டார்கள். இவ்வளவு நாம் முயற்சிகள் எடுத்ததற்குப் பின்னா லேயும், நாம் திட்டமிட்ட அளவுக்கு நம் கைக்கு நெல் வந்து சேர வில்லை என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு 'நீங்கள் போட்ட குறியீடு தவறு. அதிகமாக விளைந்ததாக கணக்குப் போட் டிருக்கின்றீர்கள், என்றுதான் அவர்கள் இங்கே எடுத்து விவரித்தார் கள். ஆக குறைந்த அளவு விளைந்தாலும் தனிப்பட்ட விவசாயிகள் தங்களுடைய தேவைக்கு வைத்துக்கொண்டு மீதி நெல் அத்தனை யையும் இது போன்ற விநியோக முறைக்குக் கொடுப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அதை விட வேறு வழியில்லை என்றுதான் நான் கருதுகிறேன். இந்த ஆண்டுதான் இந்தப் பிரச்சினை. சென்ற ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சி செலுத்தியது. அதற்கு முந்திய ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சி புரிந்தது. அப்பொழுது இந்தப் பிரச்சினை இல்லை. இந்த ஆண்டுதான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு இடைக் காலப் பிரச்சினை. இதை நாம் பெரிதுபடுத்தாமல் ஆங்காங்குள்ள விவ சாயிகள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட இன்றைக்குச் செல்லு கின்றார்கள். செல்வதற்கு முன்னாலே என்னோடு தொலைபேசியிலே பேசினார்கள். அங்கே விவசாயிகளையெல்லாம் சந்திப்பதாகச் சொல்லி யிருக்கின்றார்கள். ஆக விவசாயிகளுக்கு உதவி செய்வதில் நிச்சயம் இந்த அரசு தயக்கம் காட்டாது. விவசாயிகளும் எங்களுக்கு ஒத் துழைப்புத் தந்தாக வேண்டும். நம்முடைய துர்பாக்கியமான நிலை, வெளி விலையைப் பார்க்கிறபோது, ஒத்துழைக்க மனம் வருவதற்கு அவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்றது. வெளியிலே மிக அதிகமாக விற்கின்றது. இதில் அரசியல் கட்சி வேறுபாடே கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் உட்பட இந்தச் சங்கடங்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு ஆங்காங்கே சில

குறைகள் இருந்தாலும், விவசாயிகள் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதிகாரிகள் ஆங்காங்கே தவறுகள் செய்வார்களானால், அரசாங்கம் இதில் தலையிட்டு நிச்சயமாக அதைக் கண்டிக்கும். அந்த உறுதியை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நேற்று இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னவுடன், உணவுச் செயலாளர் அவர்களிடம் இதை உடனே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆக இதைப் பற்றி மேலும் விவாதித்து கருத்துக்கள் பரிமாற வேண்டிய அவசியமில்லை என்று கூறி, இதை விட்டு விடலாம் என்று கருதுகிறேன். ஒத்தி வைப்பதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். இப்பொழுது மறுபடியும் அதைப் பற்றித்தான் திருப்பிப் பேசப்போகின்றோம். அப்பொழுது இதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று கூறிக்கொண்டு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியமில்லை என்ற என்னுடைய கருத்தைச் சொல்லுகின்றேன்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒன்று, தஞ்சை மாவட்டத்தில் அவர்கள் வந்து பார்த்த பகுதியிலே கூடுதலாக விளைச்சல் இருந்திருக்கக்கூடும். அந்தப் பகுதியிலே அவர்கள் லெவியை வசூலிக்கக்கூடிய வசதிகள் இருந்திருக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டதாகச் சொன்னார்கள். அதே மாதிரி பல இடங்களிலே அந்த லெவியை வசூலிக்க முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் அப்பொழுதே நான் சொன்னேன். அந்த லெவி 13 மூட்டை என்று நீங்கள் போட்டு விட்டீர்களானால், இல்லாதவர்களும் அந்த லெவியைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று அவர்களிடத்திலே சொன்னேன். அப்பொழுது அவர்கள், 'மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நீங்கள் முறையிடுங்கள், எடுத்துச் சொல்லுங்கள். எங்கெங்கு குறைவாக விளைந்திருக்கிறதோ அந்த இடங்களுக்கு அந்த ஆட்சித் தலைவர்கள் போய்ப் பார்த்து, அதற்குத் தகுந்தமாதிரி வாங்குவார்கள்,' என்று சொன்னார்கள். ஆயிரக்கணக்கான மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அனுப்பப்பட்ட மனுக்களில் ஏதாவது ஒரு மனுவாவது அந்த மாதத்திலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். தாளடியிலே கூட சரியாக விளையவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தாளடியையும் சேர்த்து லெவியைக் கேட்டிருக்கிறீர்களே, எந்த மனுவையாவது கலெக்டரோ, தாசில்தாரோ, ஆர்.டி.ஓ–வோ பரிசீலித்தாரா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, விளையாத இடத்திலே லெவி கேட்கிறார்கள் என்ற சங்கடம் ஒன்று.

இரண்டாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "விளைவு குறைவாக இருந்தாலும் இருக்கக்கூடிய நிலையை உத்தேசித்து நாம் கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்" என்று

சொன்னார்கள். அவர்கள் முன்னாலே சொன்னதற்கும் இதற்கும் ஓரளவு முரணாகத் தெரிகிறது. விளையாத இடத்திலே போய் லெவிக்கு 13 மூட்டை கொடு என்று சொல்கிறபோது, அவர்கள் வைத்திருக்கக்கூடிய நெல்லையும் கொடுத்துவிட்டு, வாங்கக் கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமைதான் இந்த ஒரு பிரச்சினையிலே எழுகிறது. நாளைக்கு ஸ்டாச்சுடரி ரேஷன் முறையை தஞ்சாவூரிலே கொண்டுவந்து எல்லோருக்கும் அரசு ரேஷன் போட்டால், எங்களுக்கு சாப்பாட்டுக்குக் கொடுக்க வேண்டியதில்லை. அரசே எடுததுக்கொண்டு போகலாம். அந்த முறையும் இல்லாமல், சாப்பாட்டுக்கும் வைத்துக்கொள்ள விடாமல், அடுத்த ஆண்டுக்குள்ள விதையையும் விடாமல், அதிகாரிகளுடைய மோசமான நடவடிக்கைகள் பல இடங்களிலே நடந்துகொண்டிருப்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. இன்றையதினம் உணவு பற்றிய பிரச்சினை பேசப்பட இருக்கிற காரணத்தால், இதோடு இதை நிறுத்திக்கொண்டு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து இனிமேலாவது அங்கே தொல்லைகள் குறையக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்த முயற்சிகளை ஏற்கனவே எடுத்ததாக நான் சொன்னேன். இவ்வளவு தூரம் கஷ்டம் என்று சொன்னதற்குப் பின்னாலேயும் தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் போய்க்கொண்டே இருக்கின்றது. ஏராளமான நெல் போய்க் கொண்டிருக்கின்றது. இராமநாதபுரம் மாவட்டம் வாழுகின்றது என்றால், தஞ்சை மாவட்டத்திலிருந்து போய்க்கொண்டிருக்கிற நெல்லில் இன்றைக்கு வாழுகின்றது. ஆக விளைச்சலே இல்லை யென்றும் சொல்லிவிட முடியாது. விளைச்சல் இருக்கின்ற இடத்திலே நாம் கேட்கின்ற லெவியை உடனடியாகக் கொடுத்துவிடுகின்றார்கள் என்றும் நாம் சொல்லிவிட முடியாது. ஆக தவறு செய்கின்ற விவசாயிகள் இல்லை என்று யாராலும் வாதாட முடியவில்லை. நான் விவசாய சங்கத்தினரைக் கேட்டேன். "இவ்வளவு கஷ்டம் இருக்கும்போது, எப்படி நெல் வெளியே போகின்றது? ஆக அந்த இடத்திலே விளைச்சல் இருக்கத்தானே செய்கின்றது. அதைக் கொடுக்காமல் இருக்கிறீர்கள் அல்லவா? அதை நீங்கள் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டுமல்லவா?" என்று கேட்டேன். அவர்களும் அதற்கான பதிலைச் சொல்ல முடியவில்லை. கஷ்டம் இருக்கிறது என்பதை அரசின் சார்பிலே மறுக்க விரும்பவில்லை. இதை நாம் ஒழித்தாக வேண்டும். நிச்சயமாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள மக்களுக்குக் கஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்ற உறுதியைத் தருகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாக இருப்பதால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.